## 33: பத்து மன்னர்கள்

தத்தகாமினியின் பரிபாலனத்தில் அனைவரும் சுகமாக வாழ்ந்திருந்தனர். அவருடைய மகன் சாலிராஜகுமாரா என்பவர் பிரபலமானவர். அவர் அனைவருக்கும் நன்மை தரும் காரியங்களை செய்வதில் அதிக விருப்பம் உடையவராக இருந்தார். ஆனால் அவர் ஒரு சண்டால *(candála)* குலத்துப் பெண்ணை காதலித்தார். அவருடைய முந்தைய பிறவியில் அஷோக மாலா தேவி *(Asokamáládevi )* என்ற பெண்ணைக் காதலித்து மணந்திருந்தார். அதனாலோ என்னவோ அவளைப் போலவே இவளும் இருந்ததினால் அவர் அரச கௌரவத்தைக் கண்டு பயப்படாமல் அவளை நேசித்தார். அதனால் அவர் அரச பதவிக்கு வருவதை விரும்பாத தத்தகாமனியின் சகோதரரான சதாசிவ தீஸ்ஸா *(Saddha Tissa)* என்பவர் தாமே அரசனாகி பதினெட்டு வருடகாலம் நேர்மையான முறையில் ஆட்சி செய்து வந்தார். அவர் ஆட்சியில் இருந்த பொழுது ஸ்துபாவில் வைக்கப்பட்டிருந்த வெண்சாமரக் குடையை சரி செய்து , முடிக்கப்படாமல் இருந்த யானைக்கூடம் *(elephant-wall)* என்ற இடத்தையும் கட்டி முடித்து மக்களிடம் நல்ல பெயரைப் பெற்றார். ஆனால் துரதிஷ்டவசமாக லோஹபாசாதா கட்டிடம் தீப்பற்றி அழிந்து விட்டதினால், அதை மீண்டும் புதுப்பித்து ஏழு மாடிக் கட்டிடமாகக் கட்டினார். ஆக அதன் மகிமை நூறில் இருந்து தொன்னூறு சதவிகிதமாகக் குறைந்தது. அவர் தட்சினகிரி விகாரா *(Dakkhinagiri)* , கல்லகாலேன *(Kallakálena)* விகாரா, கலம்பகா *(Kalambaka)* விகாரா, பெட்டகவாலிக *(Pettangavalika)* விகாரா, வேலாங்கவிட்டிகா *(Velangavitthika)*, துப்பலவபீடிசக்கா *(Dubbalavapitissaka)* , மத்துவிகாரா *(Matuviharaka)* மற்றும் துராடிசாக்கவாபி *(Duratissakavapi)*

போன்ற விகாராக்களையும் கட்டினார். அது மட்டும் இன்றி அனுராதபுரத்தில் இருந்து திகவாபி வரை ஒவ்ஒரு யோஜனை துாரத்திலும் ஒவ்ஒரு விகாராவைக் கட்டினார். அது மட்டும் அல்லாது அவர் திகவாபி விகாராவை *(Dighavapi-vihara)* அமைத்து நவரத்தினக் கற்கள், மணிகள் என பலவற்றையும், தங்கத்தினாலான சித்திர வடிவங்களையும் வண்டிச் சக்கரத்தின் அளவில் செய்து அலங்கரித்து, தோரணங்கள் கட்டி தொங்க விட்டு அந்த கட்டிடத்தின் அனைத்து இடங்களையும் அழகு செய்திருந்தார். எண்பத்தி நான்காயிரம் *(84,000)* போதனைகளின் சிறப்பை வெளிப்படுத்தும் விதத்தில் எண்பத்தி நான்காயிரம் முறை *(84,000)* தானங்கள் செய்தார். இப்படியாக பாராட்டப்படும்படியான பல காரியங்களை செய்தவர் மரணத்திற்குப் பின் மேலுலகம் சென்று அவரது அடுத்தப் பிறவியில் துசியாவில் வசித்திருந்த *(Tusita)* கடவுட்களில் ஒருவராகப் பிறந்தார்.

மன்னன் சதாசிவா திகவாபியில் வசித்துக் கொண்டு இருந்த பொழுது அவருடைய மூத்த மகனான லஞ்சதிஸ்ஸா *(Lanjatissa)* என்பவர் தான் ஆட்சி செய்த இடத்தில் கிரிகும்பிலா *(Girikumbhila)* என்ற விகாராவை கட்டினார். மன்னனுடைய அடுத்த மகனான துலதானா *(Thulathana)* என்பவர் கண்டாரா *(Kandara)* என்ற விகாராவைக் கட்டினார். அவர்களுடைய தந்தை சதாசிவா அனுராதபுரம் சென்று தத்தகாமினியை சந்தித்த பொழுது இன்னொரு மகனான துலதானகா *(Thulathanaka)* என்பவர் புத்த பிட்குக்கள் தங்கிக் கொள்ள விகாராக்களை அமைக்கத் தேவையான நிலத்தை அந்த மன்னனிடம் இருந்து பெற்றுக் கொண்டு வர தன்னுடைய தந்தையுடன் சென்றார்.

**-292-**

மன்னன் சதாசிவா இறந்தப் பின் மந்திரி சபை கூடியது. அந்த ஆலோசனைக் கூட்டத்திற்கு பெருமளவு புத்த சகோதரர்களும் வந்திருந்தனர். அவர்கள் நன்கு ஆலோசனை செய்தப் பின் மன்னனின் மகனான துலந்தனாவை *(Thulanthana)* ஆட்சியில் அமர்த்தினர். அவரால் ஒரு மாதமும் பத்து நாட்களும் மட்டுமே ஆட்சியில் இருக்க முடிந்தது. ஏன் எனில் அவருடைய மற்றொரு சகோதரனான லன்சதிஸ்ஸா அதை ஏற்றுக் கொள்ளாமல் அனுராதபுரத்திற்கு வந்து தன்னுடைய சகோதரரிடம் இருந்து ஆட்சியை தான் கைபற்றிக் கொண்டார்.

மூன்று வருடங்கள் ஆட்சியில் இருந்த லன்சதிஸ்ஸா சதாசிவாவின் மரணத்திற்குப் பின், வயதுக்கு மதிப்புத் தராமல் தன்னை உதாசீனப்படுத்தியதால் மனதில் அந்த வருத்தத்தை வைத்திருந்து தனது பதவி காலத்தில் புத்த சகோதரர்களை உதாசீனப்ப படுத்தினார். ஆனால் பின்னர் அதை மறந்து விட்டு மூன்று லட்சம் செலவு செய்து ஸ்துாபியை புத்த பிட்குக்கள் பூக்கள் தூவி வணங்க உதவுமாறு இருக்க அந்த சிடியாவில் மூன்று அடுக்கு கட்டிடம் கட்டினார். அதைத் தவிற ஒரு லட்சம் *(1,00,000)* செலவு செய்து துாபராமா மற்றும் ஸ்துாபி இருந்த இடைப் பகுதியின் பூமியைத் தோண்டி அவற்றின் இடையே இருந்த பாதை ஒரே சமனாக இருக்குமாறு செய்தார். துாபருமாவின் கிழக்குப்புறம் சிறிய ஸ்துாபியை திகதுாபா *(Dighathupa)* என்ற பெயரில் கட்டினார். மேலும் லன்சகாசனா *(Lanjakasana)* என்ற கட்டிடத்தை புத்த பிட்குக்கள் தங்கிக் கொள்ளவும் கட்டினார். கண்டகதுாபாவிற்கு மேல் ஆடை அணிவது போல இருக்குமாறு கல்லில் செய்யப்பட்ட அங்கியை செய்து போட்டிருந்தார். ஒரு லட்சம் செலவு செய்து கட்டிய விகாராவில் கிரிகும்பிலா *(Girikumbhila)* என்ற பெயரில் கொண்டாடப்பட்ட பண்டிகையில்


CLICK HERE TO VIEW ENGLISH VERSION

புத்த பிட்குக்கள் ஒவ்ஒருவருக்கும் ஆறு உடைகளைத் தரச் சொல்லி இருந்தார்.

மேலும் அரித்த விகாரா *(Arittha-viha)*, குஞ்சரிஹினாகா *(Kunjarahinaka)* போன்ற விகாராக்களைக் கட்டிய பின் கிராமங்களில் இருந்த மக்களுக்கு இலவசமாக மருந்துவ உதவிகள் செய்தார். பிக்குணிக்கள் எத்தனை அரிசி வேண்டும் எனக் கேட்டாலும் அதைத் தருமாறு ஆணையிட்டார். அவர் ஒன்பது மாதமும் பதினைந்து நாட்களும் ஆட்சி செய்தார்.

லன்சகதிஸ்ஸா மரணம் அடைந்ததும் அவருடைய இளைய சகோதரர் கல்லட்டனஹா ( *Khallatanaga*) என்பவர் ஆட்சிப் பொறுப்பை ஏற்றார். லோஹபாதஸாவைச் சுற்றி முப்பத்தி இரண்டு பாசதாக்களைக் கட்டினார். ஸ்துாபியைச் சுற்றி ஹேமமாலி *(Hemamáli)* எனப்பட்ட மணல்கள் நிறப்பிய நடை பாதையைக் கட்டி அதற்கு அப்பால் தடுப்புச் சுவர் எழுப்பினார். குருன்டோவாசகா *(Kurundavásoka)* என்ற விகாராவையும் கட்டிய பின் மேலும் பல நல்ல காரியங்களைச் செய்தார்.

கல்லட்டனஹாவின் *(Khallátanága)* படைத் தலைவரான கம்மஹாரடக்கா *(Kammaharattaka)* என்பவர் கல்லட்டனஹாவிடம் இருந்து ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டார். ஆனால் கல்லட்டனஹாவின் சகோதரர் வட்டகாமனி *(Vattagamani)* என்பவர் அந்தப் படை வீரரைக் கொலை செய்து விட்டு ஆட்சியைப் பிடித்தார். கல்லட்டனஹாவின் மகனான மஹாகுலிகா *(Maháculika)*

CLICK HERE TO VIEW ENGLISH VERSION

என்பவரை தன்னுடைய மகனாக ஏற்றுக் கொண்ட வட்டகாமனி கல்லட்டனஹாவின் மனைவியை பட்டத்து ராணியாக்கிக் கொண்டார். அதனால் அவர் மஹாகுலிகாவிற்கு தந்தைப் போல ஆக அவருடைய பெயர் பிட்டிராஜா *( Pitiraja)* என ஆயிற்று.

இப்படியாக பதவியில் வந்து அமர்ந்தவருடைய ஐந்தாவது மாத ஆட்சியில் ரோஹன்னா *(Rohana)* என்ற இடத்தில் அவருடைய வம்சத்தை சேர்ந்தவர்களுடைய சொந்த ஊரில் இருந்து வந்த திஸ்ஸா *(Tissa)* என்ற ஒரு பிராமணருடைய பேச்சைக் கேட்டு தவறான நடவடிக்கைகளில் இறங்க தன்னுடைய ஆதரவாளர்களை இழந்தார். விளைவு ஏழு தமிலாக்கள் மஹாதித்தாவிற்கு படையுடன் வந்து சேர்ந்து இராஜ்யத்தை தம்மிம் தந்து விடுமாறு கோரினர். புத்திசாலியான மன்னன் தனக்கு அறிவுறை கூறிய பிராமணரிடம் அந்த இராஜ்யத்தை எடுத்துக் கொண்டு தமிலாக்களை விரட்டுமாறு கூற அவரும் அதை நம்பி தமிலாக்களுடன் யுத்தம் செய்தார். ஆனால் தமிலாக்கள் அவரை தோல்வியுறச் செய்தனர்.

அடுத்து மன்னனுடன் கோலம்பலாகா *(Kolambalaka)* என்ற இடத்தில் யுத்தம் செய்த தமிலாக்கள் அவரையும் வென்றனர். யுத்த பூமியை விட்டு தனது ரதத்தில் ஏறிக் கொண்டு தப்பி ஓடினார் மன்னன். அதைக் கண்ட புத்த பிட்கு அல்லாத ஒரு துறவியான கிரி *(Giri)* எனபவர் 'அதோ சிங்கம் ஓடுகின்றது' எனக் கத்தினார். அதைக் கேட்ட மன்னன் தன்னுடைய ஆசை நிறைவேறினால் அந்த இடத்தில் புத்த விகாரா கட்டுவதாக மனதில் பிரமாணம் எடுத்துக் கொண்டார். அவர் தப்பி ஓடுகையில் அனுலாதேவி மற்றும் தான் எடுத்து வளர்த்த மஹாகுலா மற்றும் தன் மகன் என்ற அனைவரும்

காப்பாற்றப்பட வேண்டும் என முடிவு செய்து அவர்களையும் தன்னுடன் அழைத்துச் சென்றார். பாரம் அதிகமாக இருந்ததினால் இரதத்தின் வேகம் குறைந்தது. அதனால் மன்னன் தன்னுடைய இரண்டாம் மனைவியான சோமதேவி *(Somadevi)* என்பவளுக்கு பல நகைகளைக் கொடுத்து அவளை இரதத்தில் இருந்து இறங்கிக் கொள்ளுமாறு கூற அவளும் அவற்றைப் பெற்றுக் கொண்டு தப்பி ஓடினாள்.

யுத்தத்திற்குப் புறப்படும் முன் பயந்து போன மன்னன் தன்னுடன் தன்னுடைய இரண்டு மனைவிகள் மற்றும் மகனையும் இரதத்தில் ஏற்றிக் கொண்டு போயிருந்தார். அவர் யுத்தத்தில் தோற்றுப் போய் ஓடிய நேரத்தில் தேவனாம்பியதிஸ்ஸா காலத்தில் எடுத்து வரப்பட்ட புத்தருடைய புனித சின்னமான பிட்சை பாத்திரத்தை எடுத்துக் கொள்ள மறந்து போய் விட்டார். தப்பி ஓடியவர் வேசகிரி *(Vessagiri)* என்ற காட்டில் ஒளிந்து கொண்டார். குப்பிக்காலா *(Kupikkala)* விகாராவை சேர்ந்த தேரா மஹாதிஸ்ஸா அவரை அந்த காட்டில் கண்டார். அவரைக் கண்டு மனம் இறங்கிய தேரா புத்த பிட்குக்களின் நியதியின்படி பிட்சை எடுத்த உணவை தான் சாப்பிடாமல் புத்த பிட்கு அல்லாதவருக்குக் கொடுக்கக் கூடாது என்பதினால் தான் சாப்பிட்ட உணவில் மீதியை அவர் உண்ண அளித்தார். அவருடைய கருணை மிக்க செயலை மன்னன் ஒரு கேடகா மர இலையில் *(ketaka -leaf)* எழுதி வைத்தப் பின் பல இடங்களை அந்த விகாராவுக்கு எழுதி வைத்தார். சாதாரணமாக அப்படிப்பட்ட செய்திகளை மன்னர்கள் வெள்ளி அல்லது தங்க தட்டுக்களில்தான் எழுதி வைப்பது வழக்கம். அங்கிருந்து தேராவுடன் சென்ற மன்னன் சிலசோபகண்டகா *(Silasobbhakandaka)* என்ற இடத்தை அடைந்து அங்கு வசிக்கலானார். அங்கிருந்து மீண்டும் கிளம்பி

CLICK HERE TO VIEW ENGLISH VERSION

சாமகல்லா *(Samagalla)* என்ற இடத்தின் அருகில் இருந்த முத்துவேலாங்க *(Matuvelanga)* நகருக்குச் சென்றார். தேரா அவரை பாதுகாப்பாக வைத்திருக்குமாறு கூறி தன்னுடைய சிஷ்யரான தனசிவா *(Tanasiva)* என்பவருடன் அவரை அனுப்பினார். மலாயாவில் *(Malaya)* இருந்த அவருடன் மன்னன் பதினான்கு வருடங்கள் வாழ்ந்திருந்தார்.

ஏழு தமிலாக்களில் ஒருவர் சோமதேவியின் மீது காதல் கொண்டு அவளை மணந்து கொண்டு தன்னுடன் அழைத்துக் கொண்டு இந்தியாவிற்குச் சென்று விட்டார். இன்னொரு தமிலாவோ பத்து சித்திக்களையும் கொண்டிருந்த புத்தருடைய பிட்சை பாத்திரத்தை எடுத்துக் கொண்டு இன்னொரு நாட்டிற்கு கிளம்பிச் சென்று விட்டார்.

ஆனால் தமிலா புலஹத்தா *(Pulahattha)* என்பவர் பைய்யா *(Bahiya)* என்ற தமிலாவை தம் படைத் தலைவனாக நியமித்தப் பின் மூன்று வருடங்கள் ஆட்சி செய்தார். பைய்யாவோ மன்னன் புலஹத்தாவைக் கொலை செய்து விட்டு இரண்டு ஆண்டுகள் ஆட்சி செய்தார். அவருடைய படைத் தலைவராக பனையாமரா என்பவர் *(Panayamara)* இருந்தார். பனையாமராவும் பைய்யாவைக் கொன்று விட்டு ததிகா *(Dathika)* என்ற படைத் தலைவரை தன்னுடைய படைக்கு நியமித்தப் பின் ஏழு மாதங்கள் ஆட்சி செய்தார். ததிகா என்ற அந்த தமிலாவும் பிலயமாராவை கொன்று விட்டு அனுராதபுரத்தில் இரண்டு ஆண்டுகள் ஆட்சி செய்தார். இப்படியாக அந்த ஐந்து தமிலாக்களும் பதினாலு வருடங்களும் ஏழு மாதமும் ஆட்சி செய்தனர்.

இதற்கு இடையில் மலாயாவில் ஒரு நாள் மன்னனின் மனைவி

ஒரு பேழையை வைத்திருந்தபடி சென்று கொண்டு இருந்த பொழுது வட்டகாமினியின் மனைவி அனுலாதேவி அவள் மீது மோதி அவளுடைய பேழையை தன்னுடைய காலால் உதைத்து விட , மன்னனின் மனைவி அழுது கொண்டே மன்னனிடம் சென்று அழுதாள். அதைக் கேட்ட தனசிவா கோபமடைந்து தன்னுடைய கையில் வில் ஏந்தி அவரை தாக்க வந்த பொழுது, மன்னனிடம் ஓடிச் சென்ற மனைவி அந்த செய்தியைக் கூற அவசரம் அவசரமாக மன்னன் தன்னுடைய மனைவி மற்றும் மகன்களை அழைத்துக் கொண்டு வெளியேற வந்த பொழுது தனசிவா அவர் மீது அம்பை ஏவ நினைத்த பொழுது அந்த மன்னன் தன் படையினரைக் கூவி அழைக்க நொடிப் பொழுதில எட்டு பேர் பராக்கிரமமான யுத்த ஆயுதங்களை எடுத்துக் கொண்டு ஓடி வந்ததினால் அவர் தப்பினார்.

அங்கிருந்து சென்ற மன்னன் குப்பிக்கலாவின் தேராவான மஹாதிஸ்ஸாவிடம் சென்று ரோஹன்னாவில் இருந்த அச்சகல்ல விகாராவில் *(Acchagalla-vihara)* புத்த வைபவம் நடத்துமாறு வேண்டுகோள் விடுத்தார். அதே நேரத்தில் மன்னனின் மந்திரிகளில் ஒருவரான கபிசிசா *(Kapisisa)* என்பவர் அகாச சிடியாவின் முற்றத்தை பெருக்கச் சென்றப் பின் தீரும்பி வந்து சாலையில் அமர்ந்திருந்தார். அந்த இடத்திற்கு தன்னுடைய மனைவியுடன் சென்ற மன்னன் சாலை ஓரத்தில் அமர்ந்திருந்த மந்திரி தான் வந்த பொழுது எழுந்து தலை குனிந்து நின்று மரியாதை செலுத்தவில்லை என்ற கோபத்தில் அவரை வெட்டிக் கொன்று விட்டார். அதனால் கோபமுற்ற மற்ற ஏழு மந்திரிகளும் அவரை விட்டு விலகிச் சென்று விட்டனர். அவர்கள் சென்று கொண்டு இருந்த பொழுது வழிப்பறிக் கொள்ளைக்காரர்கள் அவர்களிடம் இருந்தவற்றை

கொள்ளை அடித்து விட அவர்கள் ஹம்பகல்லகா *(Hambugallaka)* என்ற விகாராவுக்கு சென்று அடைக்கலம் ஆயினர். அங்கிருந்த தேராவிடம் அவர்கள் அடைக்கலம் ஆகி அவரிடம் இருந்து நான்கு சுத்திரங்களையும் கற்றறிந்தனர். அவரும் தனக்கு கிடைத்த பிட்சையில் எண்ணை, அரிசி, சக்கரை மற்றும் ஆடைகளை அவர்களுக்குக் கொடுத்தார்.

அவர்கள் ஓய்வெடுத்ததும் அவர்களைப் பற்றிய விவரங்களைக் கேட்டறிந்த தேரா 'புத்த போதனைகளைப் பரப்ப உங்களுக்கு எவருடைய துணை அவசியம், தமிலாவுடைய ஆதரவா இல்லை மன்னனின் ஆதரவா' எனக் கேட்க அவர்களும் அந்த இருவரில் மன்னனின் ஆதரவே தேவை எனக் கூற மன்னன் மீது அவர்கள் கொண்டிருந்த காழ்ப்புணர்ச்சியை ஒரு வழியாக மாற்றிய தேரா திஸ்ஸாவும், மஹாதிஸ்ஸாவும் மன்னனையும் வர வழித்து இரு பிரிவுகளிடையே இருந்த மனக் கசப்பை மாற்றி மீண்டும் அவர்கள் ஒண்றிணைந்து செயல்பட வைத்தனர்.

அந்த மன்னனும் அனுராதபுரத்திற்கு வந்து ததிகாவை கொன்று மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றினார். அவர்கள் புத்த விகாராக்களைப் போல கட்டி இருந்த அரமா *(Arama)* என்ற கட்டிடங்களை இடித்துத் தள்ளிய பின் பன்னிரண்டு அறைகளைக் கொண்ட விகாராவை அங்கு கட்டினார். மஹாவிராஹா கட்டப்பட்டு இருநூற்றிப் பதினேழு ஆண்டுகள், பத்து மாதங்கள் மற்றும் பத்து நட்கள் கழிந்த பின் அபயகிரி விகாராவை *(Abhayagiri-vihara)* அங்கு எழுப்பிய மன்னன் இரண்டு தேராக்களையும் வரவழித்து அதை தான் தவித்திருந்த நேரத்தில் இரு முறை தமக்கு அபயம் அளித்த தேரா மஹாதிஸ்ஸாவிற்கு அந்த விகாராவை அர்பணித்தார்.

வட்டகாமனியின் முழுப் பெயர் வட்டகாமினி அபய்யா என்பதினாலும், கிரி என்ற இடத்தில் தமிலாக்கள் கட்டிய நிகன்தாவை இடித்து விகாராவை அந்த இடத்தில் எழுப்பியதினாலும், அது அபயகிரி விகாரா எனப் பெயர் பெற்றது.

அதன் பின் அந்த மன்னன் சோமாதேவியை வரவழித்து அவளுடைய பெயரில் சோமராமா *(Somarama)* என்ற மடாலயத்தை நிறுவி அவள் நடுவே இழந்திருந்த அந்தஸ்தை மீண்டும் மீட்டுக் கொடுத்தார். யுத்த பூமியில் இருந்து தப்பிச் சென்ற பொழுது, அவளை வழியில் இறக்கிவிட்டுச் சென்றதும் அவள் கடம்பா மலர் கொடிகள் சூழ்ந்திருந்த இடத்தில் மறைந்து கொண்ட பொழுது, அந்த மறைவான இடத்தில் காலைக் கடன்களை கழித்துக் கொண்டு இருந்த சாமனேராவின் உதவியுடன் அவள் தப்பியதால் அந்த இடத்திலும் ஒரு விகாராவை அமைத்தார்.

ருவான்வாடிகடபா *(Ruwanwaelidagaba)* வின் வடக்குப் பகுதியில் சுமார் ஒரு மைல் தொலைவில் சிலசோபஹகன்டகா *(Silasobbhakandaka)* என்ற சிடியாவையும் நிறுவினார். மன்னரின் ஏழு பராக்கிரமசாலி வீரர்களில் உதயா என்பவர் தென் பகுதியில் தஷ்ஷிண விகாராவைக *(Dakkhina-vihara)* கட்டினார். அதே இடத்தில் இன்னொரு மந்திரியான முலா என்பவர் முலவோசவ விகாராவைக் *(Mulavokasavihãra)* கட்டினார். மந்திரி சலியா என்பவர் சலியாரமாவையும் *(Saliyarama)* , பப்பத்தா என்பவர் பப்பத்தரமாவையும் *(Pabbatarama)*, திஸ்ஸா என்பவர் உத்தரதிஸ்ஸரமாவையும் *( Uttaratissarãma)* கட்டினர். அவற்றைக் கட்டி முடித்ததும் தேரா திஸ்ஸாவை வரவழித்து தமக்கு சமயத்தில் அவர் செய்த

உதவிக்குக் கைமாறாக அவற்றை அவருக்கு அர்பணிப்பதாகக் கூறினார்கள்.

தேராவும் பல்வேறு இடங்களிலும் இருந்த புத்த பிட்குக்களை அழைத்து அவரவர் தகுதிக்கேற்ப அந்த விகாராக்களில் தங்க வைத்தார். அவர்களுடைய எண்ணிக்கை மிக அதிகமாக இருந்தாலும் அவர்களுக்கு எந்த விதமான குறைகளும் இருக்கூடாது என நினைத்த மன்னன் அவர்களுக்குத் தேவையான அனைத்துப் பொருட்களும் தாராளமாகக் கிடைக்க ஏற்பாடுகள் செய்தார்.

மஹாதிஸ்ஸா என்ற தேரா அடிக்கடி மடாலயத்தை விட்டு வெளியேறி ஊரில் இருந்த பிட்குக்கள் அல்லாத பாமர மக்களுடைய வீடுகளுக்கும் சென்று கொண்டு இருந்ததினால் அவரை மடத்தில் இருந்து வெளியேற்றினர். அவருடைய சிஷ்யரான பஹாலமசுத்டிஸ்ஸா *(Bahalamassutissa)* என்பவர் கோபமடைந்து அங்கிருந்து கிளம்பிச் சென்று அபயகிரி விகாராவில் போய் தங்கி தனிப் பிரிவைத் துவக்கினார். சிறிது காலத்திற்குப் பின்னர் அபயகிரி விகாராவில் இருந்து பிரிந்து சென்ற தஷ்ஷிண விகாராவை சேர்ந்தவர்கள் இரண்டாகப் பிரிந்த தேரவாடா பிரிவினர்களுடன் சேர்ந்து கொண்டு இன்னொரு பிரிவாயினர்.

பிரிந்து கொண்டேஇருந்த பிரிவினரைக் கண்ட மூன்று பித்தாக்களைச் சேர்ந்த பிட்குக்கள் மூல அத்தகதா *(புத்தரின் கதை)* அழிந்து விடக் கூடாது என நினைத்ததினால் அதுவரை வாய் மொழியினால் கூறப்பட்டு வந்திருந்த போதனைகளையும் மற்ற செய்திகளையும் புத்தகம் போல் எழுதி வைக்கத் துவங்கினர்.

வட்டகாமானி அபய்யா இப்படியாக பன்னிரண்டு வருடங்கள் ஆட்சி செய்தார். அதற்கு முன் தமிலாக்களினால் விரட்டி அடிக்கப்பட்டதற்கு முன்னர் ஐந்து மாதங்கள் ஆட்சி செய்திருந்தார்.

தன்னுடைய மன அமைதியையும் மக்களுடைய நலனையும் மனதில் கொண்டு அதற்காக உழைத்தபடி ஆட்சி செய்பவரே புத்திசாலி மன்னன் ஆவார். ஆனால் மற்றவர்களுடைய நலனை சற்றும் நினைத்துப் பார்க்காமல், சுயநலவாதியாக இருந்து கொண்டு இருப்பவர் எத்தனை பெரிய பதவியில் இருப்பினும் மன அமைதி பெறுவதில்லை.

புனிதரின் பக்தி மார்கத்தில் இணைந்த புத்த பக்தர்களின் மனதில் பேரானந்தம் பொங்கிட வழி வகுத்த கருணா மூர்த்தியின் முப்பத்தி மூன்றாம் பாகமான ‘பத்து மன்னர்கள்’ என்ற பகுதி முடிவுற்றது.

CLICK HERE TO VIEW ENGLISH VERSION